செய்தி வெளியீட்டு எண்: 430 நாள்: 30.7.2009

**<u>மூன்றாவது பன்னாட்டு அளவிலான இளையோர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற தமிழக விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு மாண்புமிகு துணை முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஊக்க தொகை வழங்கினார்.</u>**

மூன்றாவது இளையோர் காமன்வெல்த் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மகாராஸ்டிரா மாநிலம் பூனாவில் 12.10.2008 முதல் 18.10.2008 முடிய நடைபெற்றது. 71 நாடுகள் கலந்துகொண்ட இப்போட்டியில் தமிழ்நாட்டின் சார்பாக 14 வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர். அவர்களில் 5 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை வென்றுள்ளனர்.

தமிழகத்தைச் சார்ந்த இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்கள் மேன்மேலும் விளையாட்டில் தமது திறமையை மேம்படுத்தி பன்னாட்டு அளவில் பதக்கங்களை பெற்று இந்தியாவிற்கும் குறிப்பாக தமிழகத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் முதன்முறையாக இளையோர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களைப் பெற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகையை பரிசாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டு இருந்தார்.

அதனடிப்படையில், 100மீட்டர் தடை ஓட்டம், மும்முறை தாண்டுதல், தொடர் ஓட்டம் ஆகிய விளையாட்டுகளில் வெள்ளிப்பதக்கம் மற்றும் தங்கப்பதக்கம் பெற்ற **செல்வி ஜி.காயத்ரிக்கு 4 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையும்,** நீளம் தாண்டுதல் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்ற **செல்வன் பி. அசாருதீன்க்கு ரூபாய் 50 ஆயிரம் ஊக்கத்தொகையும்,** நீளம் தாண்டுதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்ற **செல்வன் ஏ.ரோஸிட்டோ சாக்ஸ்க்கு ரூபாய் 1 லட்சம் ஊக்கத்தொகையும்,** உயரம் தாண்டுதல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்ற **செல்வன் சி. நிகில் சிட்டரசுக்கு ரூபாய் 1 லட்சம் ஊக்கத் தொகையும்,** மேசைப்பந்து (தனி நபர் போட்டி மற்றும் இரட்டையர் போட்டி) ஆகிய போட்டிகளில் 2 தங்கப்பதக்கம் பெற்ற **செல்வன் ஜி. சத்தியனுக்கு 4 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகையும்** ஆக மொத்தம் **10 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இன்று (30.7.2009) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் போது மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

இந்நிகழ்ச்சியின் போது மாண்புமிகு விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.சத்யபிரத சாகு, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.